டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in




agridoctor.in | 29.6.2024 சனிக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.12, Issue : 011 - Madurai | Online Edition

# இந்திய விவசாயிகளின் குரலை வெளிப்படுத்துவதற்கான கிரிஷி கதா தளம்

## மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான் துவக்கி வைத்தார்

புது தில்லி, ஜூன் 28

மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறை அமைச்சர் நேற்று புதிய வலைதளம் ஒன்றை தொடங்கி வைத்தார். இத்துறையின் இணையமைச்சர் பாகீரத் சௌத்ரி மற்றும் நபார்டு வங்கித் தலைவர் உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். வேளாண் கட்டமைப்பு நிதியத்தின் கீழ், வழங்கப்படும் வட்டி சலுகைகளை வழங்ககோரி, வங்கிகள் அளிக்கும் கோரிக்கைகளுக்கு தானியங்கி முறையில் விரைந்து தீர்வு காண ஏதுவாக மத்திய வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறையும். நபார்டு வங்கியும் இணைந்து புதிய வலைதளம் ஒன்றை உருவாக்கியுள்ளன.

நிகழ்ச்சியில் உரையாற்றிய மத்திய அமைச்சர் சிவராஜ் சிங் சௌஹான், பல்வேறு நடவடிக்கைகள் வாயிலாக விவசாயி களின் வருமானத்தை அதிகரிக்க மோடி அரசு உறுதி பூண்டுள்ளது என்றார். வேளாண் விளைபொருட்கள் சேமிப்புத் திறனை அதிகரிப்பதன் மூலம் விவசாயிகளுக்கு ஏற்படும் இழப்பை குறைக்கும் நோக்கத்துடன், ஒரு லட்சம் கோடி ரூபாய் மூலதனத்துடன் வேளாண் கட்டமைப்பு நிதியம் பிரதமர் மோடியால் தொடங்கி வைக்கப்பட்டதை அவர் சுட்டிக்காட்டினார். இந்நிதியத்திற்கு இதுவரை ரூ.72,000 கோடி அளவிற்கு முதலீடுகள் திரட்டப்பட்டிருப்பதுடன், அதில் இதுவரை 67,871 திட்டங்களுக்காக ரூ.43,000 கோடி ஒப்புதல் அளிக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். விவசாயிகளுக்கு அதிகாரமளித்து, விழிப்புணர்வை அதிகரித்து, அறிவாற்றலை பகிர்ந்து கொள்வதுடன், ஒத்துழைப்புகளை ஏற்படுத்துவதே இந்தத் திட்டத்தின் முக்கிய நோக்கம் என்றும் அவர் கூறினார். புதிதாக தொடங்கப்பட்ட வலைதளம் மூலம், கடன் தொடர்பான கோரிக்கைகளுக்கு தானியங்கி முறையில் ஒரே நாளில் தீர்வு காணப்படும் என்றும் அவர் தெரிவித்தார். அத்துடன், வெளிப்படைத் தன்மையை உறுதி செய்து ஊழல் நடைமுறைகளை தடுக்கவும், புதிய வலைதளம் உதவும் எனவும் சிவராஜ் சிங் சௌஹான் தெரிவித்தார்.

# திருச்சுழி கிராம வேளாண் விவசாயிகள் முன்னேற்றக் குழுக் கூட்டம்

## மாவட்ட ஆட்சியர் சிறப்புரை



விருதுநகர், ஜுன் 28

விருதுநகர் மாவட்டம் வேளாண்மைத் துறையில் விரிவாக்க சீரமைப்புத்திட்டம் - 2024-25ம் ஆண்டில் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டம், கிராம வேளாண் விவசாயிகள் முன்னேற்றக் குழுக்கூட்டம் பயிற்சி தேர்வு செய்யப்பட்ட கிராமமான செந்நிலைக்குடி கிராமத்தில் நடைபெற்றது.

பயிற்சியில் மாவட்ட ஆட்சியர் ஜெயசீலன் கலந்து கொண்டு வேளாண்மை குறித்து பேசியதாவது, கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித்திட்டங்கள் மற்றும் கிராம வேளாண் விவசாயிகள் முன்னேற்றக்குழு பற்றி பேசினார். மேலும் வேளாண்மையில் விவசாயிகள் பங்கு குறித்து விரிவாக எடுத்து கூறினார். இப்பயிற்சியில் ச.குமரன், வேளாண் உதவி இயக்குநர், திருச்சுழி, வட்டார அளவில் தலைமையேற்று பேசினார். மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (விவசாயம்) நாச்சியரம்மாள் பேசும் பொழுது முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டம் குறித்து மற்றும் மண்மாதிரி எடுத்தல், மண்ணில் உள்ள சத்து குறைபாடுகள் நிவர்த்தி செய்யும் முறைகள் குறித்து விரிவாக எடுத்து கூறினார். விருதுநகர் மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் விஜயா வாழ்த்துரை வழங்கி பேசினார். அவர்கள் பேசும் பொழுது வேளாண்மையில் மகசூலை இருமடங்கு ஆக்குவதன் மூலம் லாபத்தை மும்மடங்கு ஆக்குவது குறித்து பேசினார். கோவிலாங் குளம், வேளாண்மை அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் வேணுதேவன், விதைநேர்த்தி செய்வதன் அவசியம் குறித்து செயல் விளக்கம் செய்து காண்பித்தார். முத்துராமலிங்கபுரம், ஹிஆஏ வேளாண்மை கல்லூரி, உதவி பேராசிரியர் சத்தியன், நெற்பயிரில் பூச்சி மற்றும் நோய் கட்டுப்படுத்துதல் குறித்து எடுத்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் கணேசன், வேளாண் விரிவாக்க மையத்தில் இடுபொருள் இருப்பு விபரம் குறித்து எடுத்து கூறினார். மேலும் பயிற்சிக்கான ஏற்பாடுகளை வட்டார தொழில்நுட்ப மேலாளர் பிரேமா, உதவி தொழில்நுட்ப மேலாளர் முத்துராஜ் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர் இராஜலட்சுமி செய்திருந்தனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# அ.கோவில்பட்டி கிராமத்தில் காரீப் பருவ கிராம வேளாண் முன்னேற்றக்குழு விவசாயிகள் பயிற்சி

மதுரை, ஜூன் 28

மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் வட்டாரம், வேளாண்மைத் துறையின் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்ட நிதியின் 2024-25 ஆம் ஆண்டு கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப் பட்ட அ.கோவில்பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக்குழு உறுப்பினர் காரீப் பருவ பயிற்சி 25.6.24 அன்று நடைபெற்றது.

இப்பயிற்சியில் வட்டார தொழில்நுட்பக்குழு ஒருங்கிணைப்பாளர்/ வேளாண்மை உதவி இயக்குநர் மு.மயில் கிராம வேளாண் முன்னேற்றக் குழு செயல்பாடு, அமைப்பு, அதன் நோக்கம், பற்றியும் இப்பயிற்சியில் அலங்காநல்லூர் வட்டார தொழில்நுட்பக் குழு, ஒருங் கிணைப்பாளர் மு.மயில், தலைமையேற்று பயிற்சியினை தொடங்கி வைத்து முதலமைச்சரின் மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம் திட்டத்தின் கீழ் தக்கைப்பூண்டு விதைகள் 50 சத மானியத்தில் விவசாயி களுக்கு வழங்கப்படுகிறது மற்றும் பாரத பிரதம மந்திரி கிசான் நிதி திட்டம், பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டம், நுண்ணீர்ப் பாசன திட்டம், ஒரு கிராமம் ஒரு பயிர் திட்டத்தின் கீழ் செயல்விளக்கத்திடல் அமைத்தல் குறித்து விவசாயிகளிடம் உரையாற்றினார். அலங்காநல்லூர் வட்டார துணை வேளாண்மை அலுவலர் பாலாமணி இயற்கை வேளாண்மை முறைகள் பற்றியும் அதற்கு வழங்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றியும் விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். ஓய்வு பெற்ற துணை வேளாண்மை அலுவலர் இராமன், காரீப் பருவத்தில் சாகுபடி செய்யும் மக்காச்சோளம் மற்றும் பயறுவகை ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை சாகுபடி முறைகளான விதை நேர்த்தி, திரவ உயிர் உரங்கள், நுண்ணூட்ட உரங்களின் பயன்கள், ஒருங்கிணைந்த பூச்சி நோய் மேலாண்மை முறைகள், இயற்கை வேளாண்மை, அறுவடை செய் பின் நேர்த்தி முறைகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கமளித்தார். மேலும் உதவி வேளாண்மை அலுவலர் ஈஸ்வரன், வேளாண்மைத் துறை மூலம் வழங்கப்படும் மானியத் திட்டங்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். வேளாண்மை விற்பனைத்துறை உதவி அலுவலர் கண்ணன் வேளாண்மை விற்பனைத்துறை மூலம் வழங்கப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். அ.கோவில்பட்டி கிராமளவிலான திட்ட பொறுப்பு அலுவலர் ஜெயகுமார் கலந்து கொண்டு கலைஞர் திட்டத்தின் கீழ் தோட்டக்கலைத்துறை மூலம் வழங்கப்படும் இடுபொருட்கள் குறித்து எடுத்துரைத்து விவசாயிகள் மானியத்தில் வாங்கி பயன்பெறுமாறு கேட்டுக் கொண்டார்.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

EDII பெரியகுளம் தோட்டக்கலைத்
தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம்
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம்
பெரியகுளம், தேனி மாவட்டம்

# லாபம் தரும் பால் காளான் தொழில்முனைவோராக EDII பெரியகுளம் அன்புடன் அழைக்கிறது...

முதல் பேட்ச்
25 நபர்கள் மட்டுமே.
பேட்ச்
ஜூலை 20, 2024
துவங்குகிறது

## பால் காளான் பண்ணை நேரடி பார்வையிடல்

30.06.2024, ஞாயிற்றுக்கிழமை

கட்டணம்
ரூ.20,000

தங்கள் சந்தேகங்களை நேரில் தெளிவுபடுத்திக் கொள்ள அருமையான வாய்ப்பு



நேரடி பார்வையிடலுக்கு முன்பதிவு அவசியம்

6379140583 என்ற எண்ணில் அழைத்து முன்பதிவு செய்து கொள்ளவும்

- 5 நாட்கள் தொழில்நுட்ப பயிற்சி
- 2 ஆண்டுக்கு தொடர்ந்த தொழில்நுட்ப உதவி
- கடனுதவி மற்றும் மானியம் பெறுவதற்கு உதவி
- மார்க்கெட்டிங் / கொள்முதல் உத்தரவாதம்

**இடம் :**
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
பெரியகுளம், தேனி மாவட்டம்
**நேரம் :** காலை 10.30 மணி முதல் மதியம் 1.00 மணி வரை

நாள் ஒன்றுக்கு ரூ.3000 முதல் ரூ.5000 வரை நிகர வருமானம் ஈட்ட வாய்ப்பு !

## விண்ணப்பிக்க கடைசி தேதி : 15.07.2024

தோட்டக்கலை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்
பெரியகுளம், இந்தியா - 625 604. 9361921828 / 6379140583
ceo@ediiphbif.org, ediitnaupkm@gmail.com, www.ediiphbif.org

# ஒருங்கிணைந்த முறையில் செம்மறி ஆடு வளர்ப்பு

மானாவரி நிலங்களில் ஒருங்கிணைந்த பண்ணையைத்தில் செம்மறி ஆடு வளர்ப்பு இலாபம் தரும் தொழில் ஆகும், இத்தகைய நிலங்களில் பயிர் வளர்ப்புடன் மர வாகை தீவன பயிர்கள் வளர்ப்பதன் மூலம் செம்மறி ஆடுகளுக்கு உணவாக கொடுக்கலாம். இவ்வகை தீவனப்பயிர்களில் அதிக புரதச்சத்தும், தாது உப்புகளும் உள்ளது. இவற்றில் அகத்தி, சூபாபுல், கிளரிசிடியா, கருவேல், வெள்வேல், வாகை, ஆச்சா, வேம்பு, கல்யாண முருங்கை முக்கியமானது ஆகும். மர இலைகளில் மற்றத் தீவனங்களைக் காட்டிலும் சத்துக்கள் நிறைந்து காணப்படுகிறது. இது மட்டுமின்றி மரவகை தீவனங்களை தனியாகக் கொடுக்காமல், தானிய வகை அல்லது புல்வகைத் தீவனப்பயிர்களுடன் கலந்து, ஆடுகளுக்கு பசுந்தீவனமாக அளிப்பதன் மூலம் அடர் தீவனச் செலவைக் குறைத்து. உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்யலாம். ஆட்டு பண்ணையின் வருமானம் பெட்டை ஆடுகளின் குட்டி ஈனும் திறனைக் பொறுத்து அமைகிறது ஆட்டுப்பண்ணை லாபகரமாக அமைய காலத்தே சரியான இனப்பெருக்க மேலாண்மை முறைகளை கடைபிடிக்க வேண்டும்.

பொதுவாக வெள்ளாடுகள் ஆண்டு முழுவதும் மற்றும் குட்டி ஈன்ற 60-90 நாட்களுக்குள் சினை பருவத்தை அடையும் தன்மையுடையவை, செம்மறி ஆடுகள் ஆண்டு முழுவதும் பருவம் அடைந்து குட்டி ஈன்ற போதிலும். குறிப்பிட்ட காலங்களில் தான் அதிக ஆடுகள் சினைப்பருவத்தை பருவத்தை வெளிப்படுத்தும் தன்மையுடையவை. தமிழ்நாட்டை பொறுத்தவரையில் சினைப் பருவ காலங்களை மூன்று வகைப்படுத்தலாம்.

1. மார்ச் – ஏப்ரல், 2. ஜுலை – ஆகஸ்டு, 3. செப்டம்பர் – அக்டோபர்

மார்ச்–ஏப்ரல் காலங்களில் சினைப்பருவத்திற்கு வரும் ஆடுகள் ஜுலை–ஆகஸ்டு காலங்களில் குட்டி ஈனும், பொதுவாக ஜுன் மாதத்தில் இருந்தே தென்மேற்கு பருவமழை தொடங்கி விடுவதால் இக்காலத்தில் ஆடுகள் மற்றும் பிறக்கும் குட்டிகளுக்கு நல்ல பசுந்தீவனம் கிடைக்கும். ஆடுகளில் பால் உற்பத்தியும் நன்கு இருப்பதால் குட்டிகளின் வளர்ச்சியும் நன்கு இருக்கும். ஜுலை–ஆகஸ்டு மாதங்களில் இனவிருத்தி செய்யக்கூடிய ஆடுகள் நவம்பர்–டிசம்பர் மாதங்களில் குட்டிகளை ஈனும், இக்காலங்களில் சில பகுதிகளில் கடுங்குளிர் மற்றும் பனிப்பொழிவு நிலவுவதால் குட்டிகளின் வளர்ச்சி மற்றும் ஆரோக்கியத்திற்கு சற்று தடையாக இருக்கும், இதுபோலவே.

மழையை நம்பியிருக்கக்கூடிய இடங்களில் பசுந்தீவன தட்டுபாடுகள் ஏற்பட வாய்ப்புள்ளது, இத்துடன் தாயிடம் இருந்து பிரிக்கப்படும் காலங்களில் குட்டிகளின் பசுந்தீவன தேவையை பூர்த்தி செய்யாமல் போகக்கூடிய சூழலில் குட்டிகளின் வளர்ச்சி பாதிப்படையலாம். இத்துடன் குட்டிகளின் இறப்பு விகிதமும் அதிகரிக்கும், மார்கழி மற்றும் தை மாதங்களில் மானாவரி பயிர்களை அறுவடை செய்யும் போது கிடைக்கும் வேளாண் பொருட்களை வைத்து தாய் ஆடுகளை பராமரிப்பதான் மூலம் பால் உற்பத்தியை சரி செய்யலாம்.

**பசுந்தீவனங்களில் உற்பத்தியை அதிகரிக்க வழிமுறைகள்**

● உயர் விளைச்சல் இரங்களை சீரிய தொழில்நுட்ப நுணுக்கங்கள் மூலம் சாகுபடி செய்து தீவன உற்பத்தியை அதிகரிக்கலாம். தீவனப்பயிர் உற்பத்திக்காக ஒதுக்கப்படும் பரப்பளவு மிகவும் குறைவு. எனவே, முடிந்த அளவு தீவனப்பயிர்கள் பயரிடப்படும் பரப்பினை அளவை அதிகரிக்கலாம்.

● பயறுவகைத் தீவனப்பயிர்களை மற்ற பயிர்களுடன் ஊடு பயிராகப் பயிர் செய்வதன் மூலம உற்பத்தியை அதிகரிக்கலாம்,

● சமூக நலக்காடுகள், வேளாண் காடுகள் திட்டத்தின் மூலம் தீவனமரம் மற்றும் தீவனப்பயிர்களைப் பயிர் செய்யலாம், உதாரணத்திற்கு சூபாபுல் மரங்களுக்கு இடையில் கொழுக்கட்டைப் புல் மற்றும் முயல் மசாலை 3:1 என்ற வரிசையில் பயிரிடலாம்.

● தரிசு நிலங்கள், புறம்போக்கு நிலங்கள், ஏரிக்கரை, சாலையோர நிலங்கள் போன்ற இடங்களில் தீவனப்பயிர் அல்லது தீவன மரங்களை வளர்க்கலாம்.

● விவசாய நிலங்களில் பழ மரங்களான மா, சப்போட்டா, கொய்யா, எலுமிச்சை, தென்னை மற்றும் புளி போன்ற மரங்களுக்கு இடையில் தீவனப் பயிரை ஊடுபயிராகப் பயிரிடலாம்.

● மோசமான நிலையில் உள்ள மேய்ச்சல் நிலங்களில், நல்ல புல் ரங்களான கொழுக்கட்டைப்புல், மார்வல் புல் மற்றும் பயறுவகைத் தீவனங்களான முயல் மசால், சிராட்ரோ போன்றவைகளை விதைத்து, களை எடுத்து, உரமிட்டுச் சிறந்த முறையில் பராமரிப்பதன் மூலம் தீவன உற்பத்தியை அதிகரிக்க முடியும். குறு மற்றும் சிறு விவசாயிகளின் திட்டமிட்ட பண்ணையத்தை சார்ந்தே வருங்கால வேளாண்மை அமையும். ஆகவே பண்ணையாளர்கள் ஒருங்கிணைந்த பண்ணையத்தை மேற்கொண்டால் தங்களின் வாழ்வாதாரம் மற்றும் தரத்தினை உயர்த்திக் கொள்ள முடியும்.

இதனை, **முனைவர் ம.ஜோதி லெட்சுமி, உதவிப் பேராசிரியர் & முனைவர் கொ.மொ.சக்திவேல், பேராசிரியர் மற்றும் தலைவர், கால்நடை விரிவாக்கக் கல்வித்துறை, கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், சேலம்** தெரிவித்தனர்.

# e-Nam திட்டத்தின் நன்மைகள்!

1. மறைமுக ஏலம் வாயிலாக வர்த்தகம் நடைபெறுவதால் நியாயமான போட்டி விலை கிடைப்பதை உறுதி செய்யப்படுகிறது.

2. போட்டி அதிகரிப்பதால் விளைபொருள்களுக்கான உரிய விலை கிடைக்கப் பெறுகிறது.

3. விளைபொருள்கள் தர நிர்ணயம் செய்யப்படுகிறது. இதனால் கூடுதல் விலை கிடைக்க வழிவகை செய்யப்படுகிறது.

4. விவசாயிகளுக்கு விளைபொருளின் கிரையத் தொகை நேரடியாக அவர்களின் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப் படுகிறது. இதனால் தரகு, கமிஷன், மகிமை பிடித்தம் இன்றி முழுத்தொகையும் அவர்களுக்கு கிடைக்கிறது.

5. விவாயிகளின் நேரம் சேமிக்கப்படுகிறது.

6. விளைபொருள்களுக்கான விலை விவரம் விவசாயிகளின் அலைபேசிக்கு குறுஞ்செய்தியாக அனுப்பப்படுகிறது.

7. ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் பரிவர்த்தனை செய்யப்பட்ட விளைபொருள்கள் அவற்றின் அன்றாட விலை பட்டியலுடன் வாட்ஸ்அப் தொழில்நுட்ப செய்திகளாகவும். குரல் செய்திக்காகவும் உழவர் செயலியில் அனுப்பப்பட்டு வருகிறது.

8. பண்ணை வாயில் வர்த்தகத்தின் வாயிலாக விவசாயிகளின் இருப்பிடத்திற்கே நேரடியாக சென்று விளைபொருள் கொள்முதல் செய்யப்படுவதால் விவசாயிகளுக்கு போக்குவரத்து செலவினம், ஏற்றுக் கூலி, இறக்குக்கூலி மற்றும் விளை பொருள்களுக்கு நல்ல விலை கிடைக்கப் பெறுகிறது.

9. அறுவடைக் காலங்களில் விளைபொருள்களின் அதிக வரத்து காரணமாக ஏற்படும் விலை வீழ்ச்சியினை தவிர்க்க, விவசாயிகள் தங்கள் விளைபொருள்களை ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்களில் இருப்பு வைத்து விளைபொருள்களின் மதிப்பில் 75 சதவீதம் வரை அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் வரை பொருளீட்டுக்கடன் பெற்றுப் பயனடையலாம்.

இதனை சேலம் மாவட்டம், காடையாம்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) ஹனீஷா தெரிவித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
JAIN
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# 'இப்கோ நானோ உரங்கள் மாதிரி கிராமத் திட்டம்' - அறிமுக விழா



தஞ்சாவூர், ஜூன் 28

தஞ்சாவூர் மாவட்டம், அம்மாபேட்டை வட்டாரம், பூண்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் இந்திய உழவர் உரக்கூட்டுறவு நிறுவனத்தின் 'நானோ உரங்கள் மாதிரி கிராமத் திட்டம்' இப்கோ மாநில விற்பனை மேலாளர் சுரேஷ் துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சிக்கு தஞ்சாவூர் வேளாண்மை துறை இணை இயக்குனர் சுஜாதா மற்றும் உதவி வேளாண் இயக்குனர் மோகன் ஆகியோர் தலைமை தாங்கினர்.

திட்டத்தின் சிறப்பு குறித்து சுரேஷ் பேசியதாவது, நானோ யூரியா நானோ டி.ஏ.பி சாகரிகா கடற்பாசி திரவ பொட்டாஷ் ஆகிய உரங்களை 75 சதவீத விலையில் விவசாயிகள் பூண்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கம் மற்றும் கிரீன் அக்ரோ டெக் (சாலியமங்களம்) ஆகிய விற்பனை நிலையங்களில் விவசாயிகள் பெற்றுக் கொள்ளலாம்.

நானோ டி.ஏ.பி அரை லிட்டர் பாட்டில் 600 ரூபாய்க்கு பதிலாக 450 ரூபாய்க்கும் நானோ யூரியா பாட்டில் 225 ரூபாய்க்கு பதிலாக 168 ரூபாய்க்கும் சாகரிகா கடற்பாசி திரவ பொட்டாஷ் 285 ரூபாய்க்கு பதிலாக 213 ரூபாய்க்கும் வழங்கப்பட உள்ளது. இத்திட்டத்தில் உரம் வாங்கும் விவசாயிகளுக்கு ஏக்கருக்கு 300 ரூபாய் செலவில் ட்ரோன் வழியாக நானோ உரம் மற்றும் பூச்சி மருந்து தெளித்து தரப்படும். இத்திட்டமானது 2000 ஏக்கர் களுக்கு முதல் கட்டமாக செயல்படுத்தப்பட உள்ளது.

இத்திட்டத்தில் பூண்டி, சாலியமங்கலம், கொத்தங்குடி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராம பகுதிகளை சேர்ந்து விவசாயிகள் தங்களது விண்ணப்ப படிவத்தை சமர்ப்பித்து உரங்களை பெற்றுக் கொள்ளலாம் என கூறினார். வேளாண் இணை இயக்குனர் சுஜாதா பேசியதாவது, இத்திட்டத்தில் அனைத்து விவசாயிகளும் கலந்து கொண்டு நானோ உரங்களை மானிய விலையில் பெற்று பயனுடைய வேண்டும்.

மேலும் மண்வளம் தொடர்ந்து பாதிப்படையாமல் இருப்பதற்கு நானோ போன்ற இலைவழி உரங்கள் உதவிகரமாக இருக்கிறது. புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் ஆர்வமுடன் முயற்சி செய்து பார்க்க வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

வேளாண் உதவி இயக்குனர் மோகன் பேசியதாவது, ட்ரோன் தொழில்நுட்பம் விவசாயிகளுக்கு பெரிதும் உறுதுணையாக இருக்கும். ஏற்கனவே தஞ்சாவூர் மாவட்டத்தில் நேரடி நெல் விதைப்பும் ட்ரோன் மூலம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தற்போது நிலவும் ஆள் பற்றாக்குறையை போக்குவதற்கு சிறந்த தொழில்நுட்பம் ட்ரோன் என்பதையும் கூறினார். இந்நிகழ்ச்சியை பூண்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர் பிரித்விராஜ் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தார். கள அலுவலர் சரவணன் நன்றியுரை வழங்கினார்.

நிகழ்ச்சியின் சுமார் 80 விவசாயிகள் கலந்து கொண்டு திட்டம் பற்றிய தகவல்களை கேட்டறிந்தனர்.

ட்ரோன் தொடர்பு எண் : நிலவழகு - 98945 24881.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**




# நோய் மேலாண்மையில் பசுந்தாள் உரப்பயிர்களின் பங்கு

மண்ணின் வளத்தைப் பாதுகாக்க, கரிமச்சத்தின் அளவை அதிகரிப்பதும் நிலை நிறுத்துவதும் மிக அவசியம்.

பசுந்தாள் உரப்பயிர்களான கொளிஞ்சி, சணப்பு, தக்கைப் பூண்டு, நரிப்பயறு மற்றும் தட்டைப்பயறு ஆகியவற்றைப் பயிரிடும் போது கரிமச் சத்தின் அளவை அதிகரிக்கவும். களைகளை குறைக்கவும் மற்றும் மண்ணரிப்பைக் குறைக்கவும் வாய்ப்புள்ளது என்பதை நாம் அறிவோம்.

பசுந்தாள் உரப்பயிர்களை இயற்கை உரமாக பயன்படுத்தும் போது அவை மண்ணிலிருக்கும் பெரும்பாலான நோய்க் காரணிகளின் எண்ணிக்கையைக் குறைப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

குறிப்பாக வேர் வாடல் மற்றும் வேர் அழுகல் நோய்களை உண்டாக்கிடும் பூஞ்சைகளின் எண்ணிக்கையை வெகுவாக குறைத்திருப்பதாக ஆராய்ச்சி முடிவுகள் கூறுகின்றன.

பசுந்தாளுரப் பயிர்கள் நன்மை செய்யும் நுண்ணுயிரிகளான ட்ரைக்கோடெர்மா சூடோமோனாஸ், பேசில்லஸ் போன்றவற்றை ஊக்குவித்து பயிர் நோய்களின் தாக்கத்தினை குறைத்திருப்ப தாகவும் ஆராய்ச்சி முடிவுகள் உள்ளன.

பசுந்தாள் உரப்பயிர்கள் பயிர்களில் நோய்களை தோற்று விக்கும் நோய்க்காரணிகளின் எண்ணிக்கையைக் குறைப்ப திலும், நோய்வித்துக்கள் முளைப்பதைக் குறைப்பதிலும், முளைக்கப்பட்ட நோய்க்காரணிகளின் வித்துக்களை செயல் இழக்கச் செய்வதிலும் பெரும் பங்கு வகிக்கின்றன.

மேற்கண்ட பசுந்தாள் உரப்பயிர்களை விவசாய பெருமக்கள் பயிரிட்டு மண்வளத்தை மேம்படுத்தி மறைமுகமாக நோய்க் காரணிகளைக் கட்டுபடுத்தி மகசூலையும் அதிகரிக்கலாம் என சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் வேலு தெரிவித்தார்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**

# திடியன் கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்ற குழு விவசாயிகளுக்கு பயிற்சி



மதுரை, ஜூன் 28

மதுரை மாவட்டம், செல்லம்பட்டி வட்டாரத்தில் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் கலைஞரின் அனைத்து விதமான ஒருங்கிணைந்த வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் திடியன் கிராமத்தில் 28.6.24 அன்று கிராம வேளாண் முன்னேற்ற குழு நடைபெற்றது.

பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குனர் செல்வராஜ் தலைமை வகித்தார். வேளாண்மை வளர்ச்சி திட்டங்கள் மற்றும் வேளாண் மாநிலத் திட்டங்கள் குறித்து எடுத்துரைத்தார். மேலும் வேளாண் அலுவலர் சுந்தரபாண்டியன் மற்றும் துணை வேளாண் அலுவலர் திலகவதி கலந்து கொண்டு வேளாண்மை விரிவாக்கம் மையத்தில் உள்ள மானிய திட்டங்கள் மற்றும் அரசு திட்டங்களை விளக்கி கூறினார்.

உதவி வேளாண்மை அலுவலர் சந்திரகுமார், மானிய திட்டங்கள் மற்றும் இடுபொருள் விவரங்கள் மற்றும் உயிர் உரங் களை பயன்படுத்தும் முறைகளை பற்றி விளக்கி கூறினார். மேலும் ஓய்வு பெற்ற வேளாண் அலுவலர் குணசேகரன் நெல் மற்றும் பயிர் வகை பயிர்களின் தொழில்நுட்ப முறைகளை விளக்கி கூறினார்.

மேலும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் சண்முகப்ரியா மற்றும் உதவி தொழில்நுட்ப மேலாளர் பழனி சாகுபடி முறைகள் மற்றும் பி எம் கிஸான், உழவன் செயலி குறித்த பயன்களை விளக்கி கூறினர். உதவி தொழில்நுட்ப மேலாளர் சிவபாண்டி பயிற்சிக் கான ஏற்பாடுகளை செய்திருந்தார்.

# மானியக் கோரிக்கையில் வேளாண் பொறியியல் துறை சார்ந்த அறிவிப்புகள்

தமிழகத்தில் சட்டமன்றத்தில் மானியக் கோரிக்கையின் போது வேளாண் பொறியியல் (AGRI ENGINEERING) சார்ந்த அறிவிப்புகள் குறித்து விரிவாக பார்ப்போம்.

1) டெல்டா மாவட்டங்களில் வறட்சி காலங்களில் பாசன நீர்த்தேவையினைப் பூர்த்தி செய்திடும் விதமாக தேர்ந் தெடுக்கப்பட்ட குளங்களைத் தூர்வாரி மேம்படுத்திட 3 கோடி ரூபாய் ஒதுக்கீடு.

**எவ்வாறு செயல்படுத்தபடும்?**

டெல்டா மாவட்டங்களில் வறட்சிக் காலங்களில் மக்களின் பொதுவான நீர்த் தேவைக்காவும், கால்நடைகளின் நீர்த் தேவைக்காகவும் அருகில் உள்ள விளைநிலங்களின் நீர்ப்பாசனத் தேவையினை பூர்த்தி செய்திடவும் அங்குள்ள ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் கட்டுப்பாட்டிற்கு, உட்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட குளங்களை தூர்வாரி அதன் நீர் பிடிப்பு திறன் அதிகரிக்க 24-25ஆம் ஆண்டில் செயல் படுத்தபடும்.

2) பேரிடர் காலங்களில் வெள்ள நிவாரண பணிகளை மேற்கொள்ள ஏதுவாக சக்கர வகை நெல் அறுவடை இயந்திரங்களை மாற்றி வடிவமைத்திட 25 லட்சம் நிதி ஒதுக்கீடு.

**எதற்காக மாற்றியமைக்கபடுகிறது ?**

வேளாண் பொறியியல் துறையில் நீண்ட காலமாக நெல் அறுவடைக்கு பயன்படுத்தபட்டு தற்போது அப்பணிக்கு பயன் படுத்த இயலாத சக்கர வகை (TYRE TYPE) நெல் அறுவடை இயந்திரங்களை மாற்றி அமைத்து வெள்ள நிவாரண பணியின் போது பொது மக்களை ஓரிடத்திலிருந்து பாதுகாப்பாக அழைத்து செல்லவும், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு உள்ளிட்ட நிவாரண பொருட்களை விநியோகம் செய்ய ஏதுவாக இந்த இயந்திரங்களை 2024-25 ஆம் ஆண்டில் மாற்றியமைக்க 25 லட்சம் நிதி ஒதுக்கபட்டுள்ளன.

3) உழவர் செயலியில் தனியாருக்கு சொந்தமான மண் அள்ளும் இயந்திரங்கள், அறுவடை செய்யும் இயந்திரங்கள், டிரோன்கள், விவசாய கருவிகளின் விபரங்கள் பதிவேற்றம் செய்தல், 2024-25ஆம் ஆண்டில் உழவர் செயலியில் தனியாருக்கு சொந்தமான வாடகை விடப்படுகின்ற அனைத்து இயந்திரங்களை பதிவேற்றம் செய்வதுடன் அந்த இயந்திரங் களின் உரிமையாளர் பெயர், முகவரி, அலைபேசி எண் உள்ளிட்ட விபரங்களை வட்டாரம், மாவட்ட வாரியாக பதிவேற்றம் செய்யப்படும்.

4) வேளாண் பொறியியல் தொடர்பான அரசுத் திட்டங்களின் சிறப்பம்சங்கள், விவசாயிகளுக்கு எளிதில் கொண்டு செல்லும்




வகையில் தமிழகத்தில் உள்ள 388 ஊராட்சி ஒன்றியங்களில் விழிப்புணர்வு முகாம் நடத்தபடும்.

வேளாண் பொறியியல் துறை சார்பாக செயல்படுத்தபடும் திட்டங்கள், நவீன வேளாண் இயந்திரங்களின் பயன்பாடு, இ-வாடகை KAVIADP முதலமைச்சரின் சூரிய சக்தி பம்பு செட் உழவு கருவிகள் தரிசு நில மேம்பாடு போன்ற அரசின் பல்வேறு நலத்திட்டங்களை குறித்து 24-25ஆம் ஆண்டில் 388 ஊராட்சி ஒன்றிய பகுதியில் விழிப்புணர்வு முகாம் நடத்த முடிவு செய்யபட்டுள்ளது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# அயோத்தியாப்பட்டணம் வட்டாரத்தில் பயறுவகைப் பயிர்களில் இலைப்புள்ளி நோய் அறிகுறிகள் மற்றும் மேலாண்மை

இந்நோய் செர்கோஸ்போரா கேனஸ்சன்ஸ் என்ற பூஞ்சாணத்தால் ஏற்படுகிறது.

**நோய் ஏற்படச் சாதகமான தட்பவெப்பநிலைகள்**

● அதிகப்படியான ஈரப்பதம் மற்றும் செடிகளுக்கிடையே போதுமான இடைவெளி இல்லாமல்பயிர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் இந்நோய் தாக்குதல் ஏற்படும்.

**அறிகுறிகள்**

● இலைகளின் மேற்பரப்பில் அதிக எண்ணிக்கையில் வெளிரிய மையப்பகுதியையும், சிவப்பு கலந்த பழுப்பு நிற ஓரங்களையும் கொண்ட சிறு சிறு புள்ளிகள் தோன்றும்.

● இப்புள்ளிகள், கிளைகள் மற்றும் காய்களின் மீதும் தென்படும். சாதகமான சூழ்நிலைகளில், அதிகப்படியான புள்ளிகள் தோன்றி பயிரின் பூக்கும் மற்றும் காய்பிடிக்கும் தருணத்தில் இலைகள் உதிர்ந்து அதிகப்படியான விளைச்சல் இழப்பை ஏற்படுத்தும்.

**நோய்க்காரணி மற்றும் பரவும் விதம்**

● இப்பூஞ்சாணம் பாதிக்கப்பட்ட பயிர்க்கழிவுகள் மற்றும் விதைகளின் மேல் வாழும் முதல் நிலைப் பரவல் வித்துகள் இரண்டாம் நிலை நோய் பரவல், காற்றின் மூலம் பரவும்.

● பூஞ்சாண வித்துகள் (கொனிடியா) மூலமும் ஏற்படும்.

**மேலாண்மை முறைகள்**

● நோய்த் தாக்காத விதைகளைப் பயன்படுத்த வேண்டும். வயல்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பயிர்களுக்கிடையே போதுமான இடைவெளி விட வேண்டும்.

காற்றின் மூலம் பரவும் இரண்டாம் நிலை பூஞ்சாண வித்துகள் பரவுவதைத் தடுக்க ஊடுபயிராக, உயரமாக வளரக்கூடிய கம்பு அல்லது சோளம் பயிரிடலாம்.

நிலத்தில் பயிர் கழிவுகளைக் கொண்டு மூடாக்குப் போடுவதால் நோய்த் தாக்குதல் குறையும். நோய்த் தென்பட்டவுடன் கார்பன்டசிம் (1.0 கிராம் / லிட்டர்) அல்லது மேங்கோசெப் (2.0 கிராம் / லிட்டர்) மருந்துகளை 10 நாட்கள் இடைவெளியில் தெளித்துக் கட்டுப்படுத்தலாம் என அயோத்தியாப்பட்டணம் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் த.சரஸ்வதி தெரிவித்தார்.


இப்பொழுது தென்னிந்தியாவின் பிரபலமான வாழை இரகங்களின் கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு தொழில்நுட்பத்தில் உங்களுக்காக உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்: கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்: கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்: கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits.
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.

# காய்கறி விதைகளை பகுப்பாய்வு செய்தபின் விற்பனை செய்யுங்கள்

விதை விற்பனையாளர்கள் காய்கறி விதைகளை பகுப்பாய்வு செய்த பின் விற்பனை செய்யுமாறு விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் சே.தில்லைக்கரசி விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

காய்கறிகளான வெண்டை, மிளகாய், கத்திரி, பூசணி, வெள்ளரி, புடலை, பாகற்காய், சுரைக்காய், பரங்கிக்காய் மற்றும் தக்காளி ஆகிய பயிர்களின் விதைகள் பெரும்பாலும் வீரிய ஒட்டு வகை என்பதால் அவற்றின் விலையும் மிக அதிகம். எனவே இவ்விதை களின் விதைத் தரம் குறையாமல் சேமித்து வைத்தல் மற்றும் ஆறு மாதங்களுக்கு மேல் சேமிப்பில் இருந்தால் அதன் தரத்தை மீண்டும் சோதனை செய்தபின் விற்பனை செய்வது மிக அவசியம். காய்கறி பயிர்களான மிளகாய், பூசணி, வெள்ளரி, புடலை, சுரைக்காய், பரங்கிக்காய் போன்ற விதைகளுக்கு குறைந்த பட்ச முளைப்புத்திறன் 60 சதவிகிதம் இருத்தல் வேண்டும். கத்திரி மற்றும் தக்காளி ஆகியவற்றின் குறைந்தபட்ச முளைப்புத்திறன் தேவை 70 சதவிகிதமும், வெண்டை மற்றும் மிளகாய் பயிர்களுக்கு குறைந்தபட்ச முளைப்புத்திறன் தேவை முறையே 65 மற்றும் 60 சதவிகிதம் ஆகும். எனவே, விதை விற்பனையாளர்கள் தங்களிடம் உள்ள ஒவ்வொரு காய்கறி பயிர் விதைக்குவியலும் பகுப்பாய்வு செய்து குறைந்தபட்ச முளைப்புத்திறனில் தேறியுள்ளதா என்பதை உறுதி செய்து விற்பனை செய்யுங்கள். பகுப்பாய்வு செய்யப்படாத விதைக் குவியலாக இருந்தால் பகுப்பாய்வு செய்த பின்னர் விற்பனை செய்யுங்கள்.

**பகுப்பாய்வு செய்வது எப்படி?**

விதைப்பகுப்பாய்வு செய்ய, விதை விற்பனையாளர்கள் (அ) விவசாயிகள் தங்களிடம் உள்ள ஒவ்வொரு விதைக்குவியலில் இருந்தும் தக்காளி, கீரை விதையாக இருப்பின் 10 கிராமும், கத்திரி, மிளகாய் விதையாக இருப்பின் 15 கிராமும், வெண்டை, பூசணி, வெள்ளரி, பரங்கிக்காய் விதையாக இருப்பின் 100 கிராமும், தர்பூசணி, புடலை மற்றும் பாகற்காய் விதைகளாக இருந்தால் 250 கிராமும் எடுத்து விண்ணப்பக் கடிதத்துடன் இணைத்து விதைப் பரிசோதனை நிலையம், 97, பிருந்தாவன் நகர், பெண்ணை கார்டன், 50 அடி ரோடு, கோண்டூர் போஸ்ட், உண்ணாமலைசெட்டி சாவடி, கடலூர் – 607 006 என்ற முகவரியில் இயங்கி வரும் விதைப்பரிசோதனை ஆய்வகத்தில் கொடுத்து அறிந்து கொள்ள லாம். ஒரு மாதிரியின் பகுப்பாய்வுப் பரிசோதனைக் கட்டணமாக ரூ.80/- ஆகும். இவ்வாறு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# இயந்திர நடவுக்கு மூலாம் பூசப்பட்ட விதைகள்

வேளாண்மையில் இயந்திரங்களின் செயல்பாடு அதிகரித்து கொண்டு வரும் நிலையில் மிகச்சிறிய விதைகளை இயந்திரங்கள் மூலம் சீரான இடைவெளியில் விதைப்பது சிரமமாக காணப்படுகிறது. இதை கருத்தில் கொண்டு மிகச்சிறிய விதைகளின் அளவை பெரிதுபடுத்தி இயந்திரத்தின் மூலம் சீராக விதைக்க தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் விதை அடர் மூலாம் பூசும் தொழில்நுட்பம் உருவாக்கப்பட்டுள்ளது.

அடர் மூலாம் பூசப்பட்ட விதைகள் எடையில் 7-8 மடங்கும் அளவில் 3-4 மடங்கு பெரிதாகி காணப்படும். இத்தொழில் நுட்பம் அனைத்து சிறிய வகை விதைகளுக்கும் உதாரணமாக தக்காளி, கத்தரி, மிளகாய், முள்ளங்கி, கேரட், வெங்காயம்,




கீரை விதைகள், சிறுதானியப் பயிர்கள் மற்றும் நெல் ஆகிய பயிர் விதைகளுக்கு உருவாக்கப்பட்டுள்ளது.

தற்போது அதிக அளவில் விதைகளை மூலாம் பூசுவதற்கு ஏற்ற இயந்திரங்கள் வடிவமைக்கப்பட்டு உபயோகத்தில் இருக்கின்றன. இந்த மூலாம் பூசும் முறையில் விதைகளை முதலில் ஒட்டும் பொருளுடன் கலந்து (அரிசி அல்லது மைதா கஞ்சி) பிறகு நிரப்புப் பொருளாக நுண்ணூட்டச்சத்து பொடி களையோ (டை அம்மோனியம் பாஸ்பேட், ஜிப்சம் பயிர்களின் நுண்ணூட்ட சத்து தேவைக்கேற்ப உபயோகிக்கலாம்) அல்லது சாம்பல் மற்றும் மரத்தூள் அல்லது தாவர இலை பொடிகள் (அரப்பு, புங்கம், வேம்பு மற்றும் சீமைக்கருவேல்) போன்ற வற்றையோ பயன்படுத்தலாம். இதனால் விதையின் அளவும் உருவமும் பெரிதாகிறது. மேலும், விதைப்பு எளிதாகிறது என திருநெல்நெல்லி, நிருபர் காலணியில் செயல்படும் விதைப் பரிசோதனை ஆய்வக வேளாண்மை அலுவலர் ஜெ.பி.சஜிதா தெரிவிக்கிறார்.

# இப்கோ- நுண்ணூட்ட உரங்கள்

### சல்பர் பெண்டோனைட்

சல்பர் பெண்டோனைட்டில் 90% கந்தக சத்து உள்ளது.

### பயன்படுத்தும் முறை

விதைக்கும் பொழுது அல்லது விதைத்த 40-50 நாட்களில் தானிய வகை பயிர்களுக்கு ஏக்கருக்கு 8-10 கிலோவும், காய்கறி மற்றும் பழ வகை பயிர்களுக்கு ஏக்கருக்கு 10-12 கிலோவும், பயறு வகை மற்றும் எண்ணெய் வித்து பயிர்களுக்கு ஏக்கருக்கு 12-15 கிலோவும் இட வேண்டும்.




### நன்மைகள்

- பயிர்களின் சர்க்கரை உருவாக்கம் மற்றும் இடமாற்றத்தை அதிகரிக்கும்.
- எண்ணெய் வித்து பயிர்களில் உள்ள எண்ணெயின் தரம் மற்றும் அளவு ஆகியவற்றை அதிகரிக்கிறது.
- பயிரின் வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

### சிங்க் சல்பேட்

சிங்க் சல்பேட்டில் 33% துத்தநாக சத்து மற்றும் 15% கந்தக சத்தும் உள்ளது.




### பயன்படுத்தும் முறை

மண் வழியாக இடுதல் - விதைக்கும் பொழுது அல்லது விதைத்த 45 நாட்கள் கழித்து ஏக்கருக்கு 5-7 கிலோ இட வேண்டும்.

இலை வழி தெளிப்பு - ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2-3 கிராம் சிங்க் சல்பேட் +2.5 கிராம் சுண்ணாம்பு அல்லது 15-20 கிராம் யூரியா கலவையை 10-15 நாட்கள் இடைவெளியில் தெளிக்கவும்.

### நன்மைகள்

- தழைச்சத்து மற்றும் மணிச்சத்து பயன்பாட்டை அதிகரிக்கிறது.
- தூர்கள் மற்றும் கதிர்களை அதிகரித்து பயிரின் வளர்ச்சியை மேம்படுத்துகிறது.
- சீரான பயிர் வளர்ச்சி, நொதி செயல்பாடு மற்றும் புரத தொகுப்பு ஆகியவற்றை அதிகரிக்கும்.

- ADVT.


நானோ யூரியா பிளஸ்
20 சதவீதம்
தழைச்சத்து கொண்ட நானோ திரவம்
500 மிலி
ரூ.225/-
IFFCO
NANO
UREA
PLUS
இலைவழி
தெளிப்பு
1லி. நீருக்கு
5 மி.லி
ஒரு ஏக்கருக்கு, ஒரு தெளிப்பிற்கு 500 மி.லி
முதல் தெளிப்பு - முக்கிய வளர்ச்சி
பருவமான கிளைப்பு | தூர்விடும் தருவாய்
இரண்டாம் தெளிப்பு - பூக்கும் பருவத்திற்கு முன்
அனைத்து பயிர்களுக்கும் ஏற்றது.

## தினம் ஒரு தொழில்நுட்பம்

# உயிர்கரிப் பொருள் (பையோசார்)

**உயிர்கரிப்பொருள் என்றால் என்ன (பயோசார்)?**

தாவர மற்றும் வேளாண்மை கழிவுகளை பிராணவாயு இல்லாத (ஆக்சிஜன்) சூழலில் 400ஏமுதல் 450ஏ செல்சியஸ் வெப்பநிலையில், 4 முதல் 8 மணி நேரம் வரை சூடுபடுத்தி பெறப்படுவதே உயிர்கரிப்பொருள் ஆகும் (பயோ சார்).

**தாவர கழிவுகள்**

நெல் உமி, மரத்தூள் வேலி கருவை மற்றும் பிற

**வேளாண் கழிவுகள்**

பருத்திமார், துவரைமார், சோளத்தட்டை மற்றும் பிற

**விவசாயத்தில் பயன்படுத்தும் முறை**

அமிலத்தன்மை உடைய நிலங்களுக்கு ஒரு ஏக்கருக்கு இரண்டு டன் என்ற அளவில் மண்ணில் இடவேண்டும். கடைசி உழவிற்கு முன், உயிர்கரிப்பொருளை நிலத்தின் மேற்பரப்பில் இடவேண்டும். பிறகு நிலத்தை ஒரு முறை உழுவதால் உயிர்கரிப்பொருள் காற்றில் பறந்து விடாமல், மண் துகள்களோடு நன்றாக ஒட்டிக் கொள்ளும்.

**பயன்கள்**

1. மண்ணின் நீர்பிடிப்பு திறனை அதிகரிக்கும்.

2. மண் பரும அடர்த்தி குறையும், காற்றோட்டம் கூடும்.

3. அமிலத்தன்மை உள்ள மண்ணில் இடும்பொழுது மண்ணின் கார நிலை உயரும்.

4. கரிமச்சத்து, தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகியவை கூடும்.

5. நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் பல்கிப் பெருகும்.

6. இலைகளில் பச்சையத்தின் அளவு கூடும்.

7.விதையின் தரம் மேம்படும்.

8. வேர்களின் எண்ணிக்கை கூடும்.

9. பயிர் விளைச்சல் பெருகும்.

விவசாயிகள் மண் வளத்தை மேம்படுத்துவதற்கு உயிர் கரிப்பொருள் (பையோசார்) பயன்படுத்துமாறு சேலம் மாவட்டம், வாழப்பாடி வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் மணிமேகலா தேவி கூறினார்.

மேலும் விவரங்களுக்கு வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்கள் மற்றும் அட்மா திட்ட அலுவலர்களை தொடர்பு கொள்ளுமாறு கூறினார்.

# பல்லவராயன்பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கான விவசாயிகள் பயிற்சி

புதுக்கோட்டை, ஜூன் 28

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை வட்டாரத்தில் வேளாண்மைத் துறை மூலம் செயல்படுத்தப்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை மாநில விரிவாக்கத் திட்டத்தின் கீழ் பல்லவராயன்பட்டி கிராமத்தில் கிராம வேளாண் முன்னேற்றக் குழுவிற்கான விவசாயிகள் பயிற்சி நடைபெற்றது.

உதவி தொழில்நுட்ப மேலாளர் சுப்பிரமணியன், அனைவரையும் வரவேற்று பேசினார். துணை வேளாண்மை அலுவலர் வெற்றிச் செல்வன் பேசுகையில், வேளாண்துறை மூலம் செயல் படுத்தப் படும் முக்கிய திட்டங்களான கலைஞரின் அனைத்து கிராம வேளாண் வளர்ச்சித் திட்டம், பாரம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டம், தமிழ்நாடு சிறுதானிய இயக்கம், பி.எம்.கிசான் திட்டம் ஆகியவை குறித்து விவசாயிகளுக்கு விரிவாக எடுத்துக்கூறினார். மேலும் கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் நோக்கம் மற்றும் அதன் செயல்பாடுகள் திட்டத்தில் வழங்கப்படும் இடுபொருட்கள் தரிசு நில தொகுப்பு மூலம் பாசன வசதி அமைத்தல் பற்றி எடுத்துக் கூறினார். உதவி வேளாண்மை அலுவலர் காளிதாஸ் வட்டாரத்தில் செயல்படுத்தப் படும் திட்டங்கள் பற்றி கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் ராஜீவ் அட்மா திட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் பற்றி எடுத்துரைத்தார். பயிற்சியின் இறுதியில் உதவி தொழில்நுட்ப மேலாளர் சங்கீதா நன்றி கூறினார். இப்பயிற்சிக்கான ஏற்பாடு களை உதவி வேளாண்மை அலுவலர் காளிதாஸ், வட்டார தொழில் நுட்ப மேலாளர் ராஜீவ், உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் சங்கீதா மற்றும் சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்பாக ஏற்பாடு செய்திருந் தனர். இப்பயிற்சியில் கலந்து கொண்ட விவசாயிகளின் சந்தேகங் களுக்கு நேரடியாக விளக்கம் அளிக்கப்பட்டது.

# பி.எம்.கிசான் நிதி திட்டத்தில் புதிதாக பதிவு செய்த விவசாயிகள் தங்கள் நிலையினை அறிந்து கொள்ள வேளாண்மை இணை இயக்குநர் ஆலோசனை

புதுக்கோட்டை, ஜுன் 28

புதுக்கோட்டை மாவட்டத்தில் பி.எம்.கிசான் நிதி திட்டத்தில் பதிவு செய்த விவசாயிகள் தங்களின் தற்போதைய நிலையினை பி.எம்.கிசான் இணையதளத்தில் தெரிந்துகொள்ளலாம் என வேளாண்மை இணை இயக்குநர் (பொறுப்பு) வி.எம்.ரவிச் சந்திரன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில், பி.எம்.கிசான் திட்டத்தின் கீழ் தகுதியான விவசாயிகளுக்கு மத்திய அரசு ஆண்டுக்கு 3 தவணைகளாக மொத்தம் ரூபாய் ஆறாயிரம் வழங்கி வருகிறது. இந்த தொகை நேரடியாக விவசாயிகளின் வங்கிக் கணக்கில் செலுத்தப்படுகிறது. இம்முறை 17வது தவணைத் தொகை ஜுன் 18-ம் தேதி பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் வரவு வைக்கப்பட்டது. பி.எம்.கிசான் நிதித் திட்டத்தில் ஒவ்வொரு மாதமும் புதிய பயனாளிகள் இணைந்து வருகின்றனர். அவர்களில் சிலருக்கு இத்திட்ட நிதி உதவி கிடைக்காமல் இருக்கும். இதற்கு பல காரணங்கள் உள்ளன. பயனாளிகளின் பெயரில் (நேரடி பட்டா) இல்லாத விவசாயிகள், இறந்த விவசாயிகளின் பெயர்கள் பி.எம்.கிசான் வலைதளத்தில் இருந்து நீக்கப்பட்டு வருகிறது. எனவே, உங்கள் பெயர் பயனாளிகளின் பட்டியலில் இருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளவும். இதனை தெரிந்து கொள்வதற்கு, பி.எம்.கிசான் அதிகாரப்பூர்வ இணைய தளத்திற்கு சென்று, (https://pmkisan.gov.in) முகப்பு பக்கத்தின் கீழ்பகுதியில் ஃபார்மர்ஸ் கார்னர் (Farmers Corner) என்ற ஒரு பகுதியைக் காண்பீர்கள். அந்த பிரிவில் உங்கள் நிலையை அறிந்து கொள்ளுங்கள் (Know your Status) என்பதை தேர்வு செய்ய வேண்டும். Know your Status என்பதை கிளிக் செய்தவுடன் ஒரு தனிப் பக்கம் திறக்கும். அங்கு பயனாளிகள் தங்கள் பதிவு எண்ணை உள்ளீடு செய்ய வேண்டும். பின்னர் அதற்கு அடுத்துள்ள கேப்ட்சா குறியீட்டை உள்ளிடவும். பின்னர் “Get OTP” என்பதைத் தேர்வு செய்யவும். ஆதாருடன் இணைக்கப்பட்ட கைபேசிக்கு OTP பெறப்படும்.

பெறப்பட்ட OTP எண்ணை உள்ளிடவும். பின்னர் பயனாளி களின் பட்டியல் திறக்கப்படும். அதில், விவசாயிகள் தற்போதைய பி.எம்.கிசான் நிலையினை அறிந்து கொள்ளலாம். மேலும், தங்கள் பதிவு எண் நினைவில் இல்லாதவர்கள் தங்கள் நிலையை அறிந்து கொள்ள Know your Status பகுதியில் Know your Registration no என்பதை தேர்ந் தெடுக்கவும். அலைபேசி எண் அல்லது ஆதார் எண் அளித்தால் பதிவு எண்ணை தெரிந்து கொள்ள இயலும். மீண்டும் Know your Status பகுதியில் பதிவு எண்ணை உள்ளீடு செய்தால் பி.எம். கிசான் நிதித் திட்டத்தில் விவசாயிகள் தற்போதைய நிலையினை அறிந்து கொண்டு பயன் பெறலாம் என வேளாண்மை இணை இயக்குநர் (பொ) வி.எம்.ரவிச்சந்திரன் ஆலோசனை தெரிவித்துள்ளார்.



# பாரம்பரிய நெல் இரகங்களின் ஊட்டச்சத்து மற்றும் மருத்துவ குணங்கள் – ஓர் பார்வை

நேற்றைய தொடர்ச்சி...

### கருப்புக்கவுனி

உட்கொள்ளும்போது அதிக நோய் எதிர்ப்பு சக்தி உருவாகும். இதில் 18 வகையான அமினோ அமிலங்கள் மற்றும் துத்தநாகம் அடங்கியுள்ளது. அதிக அளவு இரும்பு சத்து உள்ளதால் இரத்தத்தில் ஆக்ஸிஜனை எடுத்து செல்ல உதவுகிறது. அதிகளவு தாமிரம், கரோட்டின், ஆன்தோசயனின் மற்றும் வைட்டமின்கள் செறிந்துள்ளதால் நீரிழிவு நோய், இருதய நோய் & புற்றுநோய் வராமல் தடுக்கிறது.

சிவகங்கை மாவட்டத்திலுள்ள அனுமந்தகுடி என்னும் கிராமத்தில் விளைகின்றது. இதன் கால அளவு 150-170 நாட்கள் ஆகும். செப்டம்பர்-ஜனவரி மாதங்கள் இந்த இரகம் பயிரிடுவதற்கு ஏற்ற பருவங்கள். நேரடி விதைப்பு முறை ஏற்றது. தனி தானிய மணியின் நீளம் 1 செ.மீ அளவு ஆகும்.



### சீரக சம்பா

நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள வெள்ளப்பாலம் & கீவலூர் தாலுக்கா பகுதிகளில் நன்கு வளரக் கூடியது. 125-130 நாட்கள் இதன் வாழ் காலம். சம்பா பருவம் இதற்கு ஏற்றது. மேலும் நாற்றங்காலி லிருந்து பிரித்து நடவு செய்யும் முறையே ஏற்றது. நாற்றங்கால் காலம் 30-35 நாட்கள். மேலும் பயிர்ச் செடி 80.5 செ.மீ உயரம் வரை வளரக் கூடியது. மகசூல்-1500 கிலோ/ ஏக்கர். தானியமணி மிகவும் சிறியதாகவும், சீரகத்தை போன்றும், மெலிந்தும், நறு மணம் மிக்கதாகவும் காணப் படும். எனவே விசேச சமயங்களில் பிரியாணி சமைப்பதற்கு இந்த இரக அரிசி பயன்படுகின்றது. அதிகளவு கலோரி & வைட்டமின்கள் உள்ளது.

### மாப்பிள்ளை சம்பா



நீண்ட நாள் பயிர் 160 நாட்கள் வளரகூடியது. சம்பா பருவம் இதற்கு ஏற்றது. மேலும் பயிர்ச் செடி 137 செ.மீ உயரம் வரை வளரக் கூடியது. மகசூல் – 750 கிலோ/ ஏக்கர். திருமணத்தின்போது மாப்பிள்ளையின் உடல் வலுபெறு வதற்காக அளிக்கப்பட்டதால் இப்பெயர் பெற்றது. செரிமானத்தை மேம்படுத்தவும், வாய்ப்புண்ணை குணப்படுத்தவும், நீரிழிவு நோயை கட்டுபடுத்தவும்

### கிச்சடி சம்பா



நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள கீவலூர் தாலுக்காவில் விளையக் கூடியது. 140 நாட்கள் கால அளவு கொண்ட சம்பா இரகமாகும். மகசூல் – 1125 கிலோ/ஏக்கர். அரிசி வெளிறிய வெள்ளை நிறமுடையது. பூச்சிகள் & நோய்களை எதிர்க்கும் திறன் கொண்டு விளங்குவதே இதன் சிறப்பம்சம் ஆகும்.

### பூங்கார்



ராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள ரகுநாதபுரம் கிராமத்தில் விளையக் கூடிய குறுகிய (70 நாட்கள்) சம்பா இரகமாகும். கரையோர மணல் கலந்த மண் இதற்கு மிகவும் ஏற்றது. வறட்சி நிலையை எதிர்க்கும் திறன் கொண்ட உயரமான இரகமாகும். குளி பரிச்சான் & வரப்புக் கொடஞ்சான் விட வறட்சி நிலையைத் தாங்கும் தன்மையுடைது. மிகவும் குறைந்த மழைப்பொழிவு நிலைகளிலும் வளரும் தன்மை உடையது.

இது அறுபதாம் கொடை என்று அழைக்கப்பட்டது. இட்லி & தோசை செய்வதற்கு ஏற்றது. தொடர்ந்து உட்கொள்ளும்போது உடலை வலுபெறச் செய்கிறது. கர்ப்பிணி பெண்களுக்கு சுகப் பிரசவம் நடைபெறுவதற்காக கொடுக்கப்படுகிறது.

### காட்டுயானம்



நீண்ட நாள் பயிர் 180 நாட்கள் வளரகூடியது. பயிர்ச் செடி 210 செ.மீ உயரம் வரை வளரக் கூடியது. இட்லி & தோசை செய்வதற்கு ஏற்றது. தொடர்ந்து உட்கொள்ளும் போது உடலை வலுபெறச் செய்து நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

நீரிழிவு நோயை கட்டுபடுத்தவும் உதவுகிறது. காட்டுயான தவிட்டின் கசாயம் மருந்தாகாக பயன்படுத்தபடுகிறது.

நாளை தொடரும்...

தகவல் : **முனைவர் ஆ.மதிவாணன், தொழில்நுட்ப வல்லுநர் (மனையியல்), வேளாண்மை அறிவியல் நிலையம், சிக்கல், நாகப்பட்டினம்.**

மேலும் விபரங்களுக்கு, திட்ட ஒருங்கிணைப்பாளர், வேளாண்மை அறிவியல் நிலையம், சிக்கல், நாகப்பட்டினம், தொலைபேசி எண் : 04365-299806, மின்னஞ்சல் : kvksikkal@tnfu.ac.in.


இப்பொழுது தென்னிந்தியாவின்
பிரபலமான வாழை இரகங்களின்
கன்றுகள் அதிநவீன திசுவளர்ப்பு
தொழில்நுட்பத்தில் உங்களுக்காக
உருவாக்கி தருகிறது ஜெயின் நிறுவனம்
ஜெயின் ஏலக்கி:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் செவ்வாழை:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் பூவன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 16/-
ஜெயின் மொந்தன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 20/-
ஜெயின் நேந்திரன்:
கன்று ஒன்றுக்கு ரூ. 18/-
முன்பதிவு தொடர்புக்கு :
94425 02396
94422 03387
94425 04480
Jain Tissue-Culture
Jain Irrigation Systems Ltd.
Small Ideas. Big Revolutions.
JAIN HI-TECH PLANT FACTORY
Better Yield - Greater Profits
போக்குவரத்து கட்டணம் கூடுதலாக. (உடுமலையிலிருந்து)
ஏமாற்றத்தைத் தவிர்க்க, உங்கள் தேவைகளை இன்றே முன்பதிவு செய்யுங்கள்.
குறிப்பு: ஜெயின் திசு வளர்ப்பு தாவரங்கள் நோய்த் தாக்கம் இல்லாதவை என்ற போதிலும் நிலத்தில் ஊன்றிய பின்பு நோய் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. அதனால் நோய்த் தாக்கம் ஏற்படாது என்பதற்கோ, விளைச்சல் பாதிக்கப்படாது என்பதற்கோ நிறுவனம் உத்தரவாதம் அளிக்காது.